உ

கடவுள் துணை.

காஞ்சீபுரம்

காமாட்சியம்மன்

ஆசிரியவிருத்தம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

கடவுள் துணை.

காஞ்சீபுரம்

காமாக்ஷியம்மன்

ஆசிரியவிருத்தம்.

காப்பு-பின்முடுகுவெண்பா.

மங்களஞ்சேர் கச்சிநகர் மன்னுகா மாட்சிமிசைத்
துங்கமுள நற்பதிகஞ் சொல்லவே—திங்கட்
புயமருவும் பணியணியும் பரமனுளந் தான்மகிழுங்
கயமிகவைங் கரனிருதாள் காப்பு.

ஆசிரியவிருத்தம்.

சுந்தரிசௌந்தரி நிரந்தரிதுரந்தரி சோதியாய் நின்றவுமையே, சுக்ரவாரத்திலுனை கண்டுதெரிசித்தவர்கள் துன்பத்தைநீக்கிவிடுவாய், சிந்தைதனிலுன் பதந் தன்னையேதொழுதவர்கள் துயரத்தைமாற்றிவிடுவாய், செகமெலாமுன்மாய்கை புகழவென்னலா

மோ சிறியனால்முடிந்திடாது, சொந்தவுன்மைந்தனை எந்தனையிரட்சிக்க:சிறியகடனுன்னதம்மா, சிவசிவ மயேஸ்வரி பரமனிடயீஸ்வரி சிரோன்மணிமனோன் மணியுநீ, அந்தரிதுரந்தரி நிரந்தரிபரம்பரியனுதாட் சகியுநீயே, அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 1

பத்துவிரல்மோதிரம் எத்தனைபிரகாசமது பாடகந்தண்டைகொலுசும், பச்சைவைடூரிய மிச்சையாயிழைத்திட்ட பாதச்சிலம்பினொளியும், முத்து மூக்குத்தியும் ரத்தினப்பதக்கமும் மோகனமாலையழகும், முழுதும்வைடூரியம் புட்பராகத்தினால் முடிந்திட்டதாலியழகும், சுத்தமாயிருக்கின்ற காதினிற்கம்மலுஞ் செங்கையிற்பொன்கங்கணம், செகமெலாம் விலைபெற்ற முகமெலாமொளிவுறல சிறுகாதுகொப்பினழகும், அத்திவரதன்றங்கை சத்திசிரூபத்தை யடியனாற்சொல்லதிறமோ, அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடுமம்மைகாமாட்சியுமையே. 2

கெதியாகவுந்தனைக் கொண்டாடிநின்றெந்தன குறைகளைச் சொல்லிநின்றும், கொடுமையாமென்

மீதில்வறுமையைவைத்துநீ குழப்பமாயிருப்பதேனோ, சதிகாரியென்றுநா னறியாமலுந்தனைச் சதமாகநம்பினேனே, சற்றாகிலுமனது வைத்தென்னை ரட்சிக்க சாதகமுனக்கில்லையோ, மதிபோலவொளியுற்ற புழைநெடுங்கரமுடையமதகஜனையீன்றதாயே, மாயனிடதங்கையே பரமனதுமங்கையே மபானத்தில்நின்றவுமையே, அதிகாரியென்றுநா னுனையாய் நம்பினே னன்புவைத்தென்னையாள்வாய், அழகான காஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 3

பூமியிற்பிள்ளையாய்ப் பிறந்தும்வளர்ந்துநான் போனதோர்ஸ்தலமுமறியேன், பெரியோர்கள்தரிசன மொருநாளுமநான்கண்டு போற்றிக்கொண்டாடியறியேன், வாமியென்றுன்னைசிவ காமியென்றேசொல்லி வாயினாற்பாடியறியேன், மாதாபிதாவினிட பாதத்தைநானுமே வணங்கியொருநாளுமறியேன், சாமியுயன்றேயெண்ணி சதிருடன்கைகூப்பி சரணங்கள் பண்ணியறியேன், சற்குருவின்பாதாரவிந்தங்களைக் கண்டு சாஷ்டாங்கதெண்டனறியேன், ஆமிந்தபூமியி லடியேனைப்போல்மூட னுச்சிநீகண்டதுண்டோ, அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 4

பெற்றதாயென்றுன்னை மெத்தவும்நம்பினன் பிரியமாயிருந்தேனம்மா, பித்தலாட்டக்காரியென் றறியாதுன்புருஷனை மறந்தனம்மா, பத்தனுயிருந்து முன் சித்தமுமிரங்காமல் பராமுகம்பார்த்திருந்தால், பாலனுனெப்படி விசனமில்லாமலே பாங்குடனிருப்பதம்மா, இத்தனைமோசங்க ளாகாதுயிது தர்ம நீதியுமல்லவம்மா, அத்திமுகனுசையோ யிப்புத்திரனை மறந்தவகை யெனக்கருள்புரிகுவாய்நீ, அழகான காஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 5

மாயவன்றங்கைநீ மரகதவல்லிநீ மணிமந்த்ரகாரிநீயே, மாயாசொரூபிநீ மகேஸ்வரியுமானநீ மலையரையன்மகளானநீ, தாயேமீனுட்சிநீ சற்குணவல்லிநீ தயாநிதிவிசாலாட்சிநீ, தாரணியில்பெயர்பெற்ற பெரியநாயகியும்நீ சரவணனையீன்றவளும்நீ, பேய்களுடனுடுநீ அத்தனிடபாகமதை பேர்பெறவளர்த்தவளும்நீ, பிரணவசொரூபிநீ பிரசன்னவல்லிநீ பிரியவுண்ணுமுலையுநீ, ஆயிமகமாயிநீ ஆனந்தவல்லிநீ அகிலாண்டவல்லிநீயே, அழகானகாஞ்சியில் புகழாக வாழ்ந்திடு மம்மைகாமாட்சியுமையே. 5

பொல்லாதபிள்ளையா யிருந்தாலும்பெற்றதாய் புத்திகளைச் சொல்லவில்லையோ, பேய்பிள்ளையானாலு ம் நீபெற்றபிள்ளையாய்ப்பிரியமாய்வளர்க்கவில்லையோ, கல்லாகிலுமூச்சு நில்லாமல்வாய்விடுங் கதறினனமு தகுறலில், கடுகதனிலெட்டிலொரு கூறுவதிலாகி லுங் காதினிலுமைழந்ததில்லையோ, இல்லாதவன்மங்க ளென்மீதிலேனம்மா யினிவிடுவதில்லைசும்மா, இருவ ரும்மடிபிடிபாய் தெருவினில்வீழ்வது மிருதருமமல் லவம்மா, எல்லாருமுன்னையே சொல்லியேயேசுவா ரதுநீதியல்லவம்மா, அழகானகாஞ்சியில் புகழாகவா ழ்ந்திடு மமமைகாமாட்சியுமையே. 7

முன்னையோர்சென்மாந்த்ர மென்னபாவங்கள் மூடநான்சிசய்தேனம்மா, மெய்யென்றுபொய்சொ ல்லி கைதனிற்பொருள்தட்டி யோகங்கள்பண்ணி னேனோ, என்னமோதெரியாதுவிட்சணந்தன்னிலே யிக்கட்டுவந்ததமமா, ஏழைநான்செய்தபிழை தாய் பொறுத்தருடந்து மென்கவலைதீருமம்மா, சின்னங்க ளாகாது செயமில்லையோதாயே சிறுநாணமாகுதம் மா, சிந்தனைகளென்மீதில் வைத்துநற்பாக்கியமருள சிவசத்திகாமாட்சிநீ, அன்னவாகனமேறி யானந்த

மாகவுன் னடியன்முன்வந்துநிற்பாய், அழகானகா னகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சியு மையே. 8

எந்தனைப்போலவே ஜென்மமெடுத்தோர்களி ன்பமாய்வாழ்ந்திருக்க. யான்செய்தபாவமோ வித் தனைவறுமையி லுன்னடியேன்தவிப்பதம்மா, உன் யேதுணையென்று உறுதியாய்நம்பினே னுன்பாதஞ் சாட்சியாக, உனையன்றிவேறுதுணை யினியாரையுங் காணேன் உலகதனிலெந்தனுக்கு, பின்னையொன்றெ ண்ணிநீ சொல்லாமலென்றுவரும் போக்கடித்தென் னைரட்சி, பூலோகமெச்சவே பாலன்மார்க்கண்டன் போல் பிரியமாய்க்காத்திடம்மா, உன்னையேயின்ன முன் னடியேனைரட்சிக்க அட்டிசெய்யாதேயம்மா, அழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகா மாட்சியுமையே. 9

பாரதனிலுள்ளளவும் பாக்கியத்தோடென்னை பாங்குடனிரட்சியம்மா, பக்தியாயுன்பாதம் நித்தந் தெரிசுத்தவர் பாலருக்கருள்புரியவும், சீர்பெற்றதே சத்தில் சிறுபிணிகள்வாராமல் செங்கலிபைணுகாம லும், சேயனிடபாக்கியஞ் செல்வங்களைத்தந்து செ

யம்பெற்று வாழ்ந்துவரவும், பேர்பெற்றகாலனைப் பி
ன்றொடரவொட்டாமற் பிரியமாய்க் கார்த்திடம்மா,
பிரியமாயுன்மீதில் சிறியனுன்சொன்னகவி பிழைக
ளைப் பொறுத்துரட்சி, ஆறதனில்மணல்குவித் தரு
ம்பூசைசெய்தவென் னம்மையேகாம்பரியே, அழ
கானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமாட்சி
யுமையே. 10

எத்தனைஜெனனமெ தெடுத்தனோதெரியாதுவிப்
பூமிதன்னிலம்மா, இனியாகிலுங்கிருபை வைத்தெ
னைரட்சியு மினிசெனமெடுத்திடாமல், முத்திதரவே
ணுமென் றுன்னையேதொழுதுநான் முக்காலும்நம்
பினேனே, முன்பின்னுந்தோணுமல்மனிதரைப்போ
லநீ முழித்திருக்காதேயம்மா, வெற்றிபெறதன்மீதி
ல் பத்தியாய்நான்சொன்ன விருத்தங்கள்பதினொன்
றையும், விருப்பமாய்கேட்டநீ யளித்திடுஞ்செல்வத்
தை விமலனுமேசப்போறார், அத்தனிடபாகமதை
விட்டுவந்தேயெந்த னருங்குறையைத்தீருமம்மா, அ
ழகானகாஞ்சியில் புகழாகவாழ்ந்திடு மம்மைகாமா
ட்சியுமையே. 11

காமாட்சிம்மன் ஆசிரியவிருத்தம்

முற்றிற்று.

———